செய்தி வெளியீடு எண். 193 நாள். 10.04.2018

## தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு அரசு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் வேலைவாய்ப்பு பிரிவின் சார்நிலை அலுவலகங்களான அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சிறு அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுகிறது. அதனடிப்படையில் வரும் 13.04.2018 அன்று திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ள சிறு அளவிலான வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொள்ளும் நிறுவனங்களின் விவரங்கள் கீழ்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பணியின் பெயர் | கல்வித் தகுதி | காலியிட எண்ணிக்கை | வயது வரம்பு | ஊதிய விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | TVS Sundaram Breaks India Ltd. | 1.Boat Apprentices<br>2. Neem Trainee | பட்டய படிப்பு<br>Dip. Mech. Engg<br>Dip. Automobile Engg. | 150 | 18 முதல் 30-க்குள் | பயிற்சிப் படி ரூ.11,050/- |
| 2 | Ashok Leyland Ltd., | Assembly Section | ITI<br>Fitter, MMV, Machinist, Electrician | 75 | 18 முதல் 25-க்குள் | ரூ.12,500/- + ஊக்கத் தொகை ரூ.1000/- |
| 3 | Kalyan Jewellers | Marketing Executive | +2 / பட்டப்படிப்பு | 50 | 20 முதல் 40-க்குள் | ரூ.11,500/- + ஊக்கத் தொகை |

எனவே மேற்காணும் கல்வித்தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் 13.04.2018 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் திருவள்ளூரில் நடைபெறும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்தனியார் வேலைவாய்ப்பு முகாமில் பணிநியமனம் பெறுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு ரத்து செய்யப்படமாட்டாது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**